## *2020ம் ஆண்டு கருபொருள்: குணமளிக்க மகிழ்ச்சியுடன் அனுப்பப்படுதல்*

*ஜனவரி மாத அ.தி.ச. சிந்தனை மடல்: நமது உள்ளத்தையும் கண்களையும் திறப்போம்*

*கவனம்: கடவுளே நம்மை தூதுரைப்பணிக்கு அனுப்புகிறார்*
*நிகழ்வு: இறைவார்த்தை ஞாயிறு (ஒற்றுமை ஞாயிறு)*

---

***அறிமுகம்:***

*2020 ஆண்டிலிருந்து பொதுக்காலத்தின் 3ஆம் ஞாயிறு இறைவார்த்தைக்கு அர்ப்பணிக்கப்படும் என பாப்பரசர் அண்மையில் பிரகடனம் செய்துள்ளார். திருச்சபை யூத மக்களுடன் அதன் பிணைப்பை வலுப்படுத்தவும் கிறிஸ்துவ ஒற்றுமைக்காக ஜெபிக்கவும் ஊக்குவிக்கும் காலப்பகுதியின்போது இந்நிகழ்வும் இடம் பெறுகின்றது. மேலும் ''கேட்பவர்களுக்கு உண்மையான பாதையையும், உறுதியான ஒற்றுமையையும் மறைநூல் சுட்டிக்காண்பிப்பதால், கிறிஸ்துவ ஒன்றிப்பின் மதிப்பீடுகளை இக்கொண்டாட்டம் கொண்டிருக்கிறது'' என அர்த்தம் கொள்ளலாம். **''அப்போது மறைநூலை புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களை திறந்தார்''** என்ற புனித லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு வசனத்தை கொண்டு பாப்பரசர் பிரான்சிஸ் எழுதிய ''அப்பேருயிட் இல்லிஸ்'' (Aperuit Illis) என்ற ஆவணத்தை மையப்படுத்தி இம்மாத கருபொருள் அமைக்கப்பட்டுள்ளது.*

***ஆரம்ப பாடல்:***

*அழைக்கிறார் இயேசு ஆண்டவர்*
*ஆவலாய் நாம் செல்லுவோம் (2)*
*அவர் பலியினில் கலந்திட அவர் ஒளியினில் நடந்திட - 2*
*சாட்சிகளாய் என்றும் வாழ்ந்திட இந்நாளிலே*

*1 தேடியே தேவன் வருகிறார் தன்னையே நாளும் தருகிறார்*
*தோள்களில் நம்மைத் தாங்குவார் துயரினில் அவர் தேற்றுவார்*
*சுமைகளை சுகங்களாக மாற்றுவார்*
*வளமுடன் வாழும் வழியைக் காட்டுவார் (2)*
*வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்*
*வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்*

*2 அன்பினால் உலகை ஆளுவார் ஆவியால் நம்மை நிரப்புவார்*
*அமைதியை என்றும் அருளுவார் ஆனந்தம் நெஞ்சில் பொழிகுவார்*
*விடியலின் கீதமாக முழங்குவார்*
*விடுதலை வாழ்வை நமக்கு வழங்குவார் (2)*
*வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்*
*வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்*

*அ.தி.ச. உறுப்பினர் ஒருவர் **ஆரம்ப செபம்** கூறுவார்.*

**உரையாடல்**

*(2019 செப்டம்பர் 30ம் திகதி இறைவார்த்தையின் ஞாயிறு கொண்டாட்டத்தை பிரகடனப் படுத்தப்பட்டபோது புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியை ஆதரித்து வளர்க்கும் பாப்பிறையின் மன்றத் தலைவர் பேராயர் ரினோ ∴பிசிச்செல்லா அவர்கள் வழங்கிய உரைப்பகுதி)*

*இறைவார்த்தையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கூற வேண்டியிருக்கிறது ஏனெனில் ''பெரும்பான்மையான கத்தோலிக்கர்கள்'' புனித மறைநூலை வாசிக்கும் பழக்கத்தை கொண்டிருக்கவில்லை. அனேகர், பூசையில் கலந்துகொள்ளும்போது மட்டும் இறை வார்த்தையை கேட்கின்றனர். திருவிவிலியம் பரவலாக விநியோகம் செய்யப்பட்ட*

நூலாக இருந்தப்போதும், நமது கரங்களில் தவழாத காரணத்தினால் அதிக தூசு படிந்த நூலாக கருதப்படுகிறது.

“இறைவனின் வார்த்தையை நமது கைகளில் ஏந்தி பிடிக்க வேண்டும் என பாப்பரசர் நம்மை அழைக்கின்றார்.” அப்போதுதான் அது நமது ஜெபமாக மாறுவதோடு ஒருவருடைய வாழ்க்கை அனுபவத்தின் ஒரு மாபெரும் பகுதியாக விளங்கும்” என பேராயர் மேலும் கூறினார். பரிசுத்த வேதாகமத்துடன் நாம் ஒரு நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்: இல்லையெனில், நமது இதயங்கள் தொடர்ந்து உணர்வற்று விளங்கும், நமது கண்களை மூடச்செய்யும், அப்போது நாம் பல வடிவங்களை கொண்ட குருட்டுத்தன்மைகளால் தாக்கப்படுவோம்.

அருள் அடையாளங்களையும் புனித மறைநூலையும் பிரிக்கவே முடியாது என பாப்பரசர் மேலும் கூறுகிறார். பரிசுத்த வேதாகமத்தில் இயேசு அவரது வார்த்தையால் ஒவ்வொருவரிடம் பேசுகின்றார். “நாம் அவரது குரலைக்கேட்டு நமது மனக்கண்கள் மற்றும் இதயங்களின் கதவுகளைத் திறந்தால்”, அவர் நமது வாழ்வின் உள்ளே சென்று நம்மோடு என்றென்றும் தங்குவார்.

***சிந்தனை:***
மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் உங்களுக்கும் இன்றையத் திருச்சபைக்கும் என்ன அர்த்தத்தை வழங்குகின்றன. ஒருவர் ஒருவருடன் பகிர்ந்துகொள்ளவும்.

**ஆய்ந்தறிதல்**





On the Road to Emmaus

*லூக்கா 24: 13-33*

*அதே நாளில் சீடர்களுள் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோ மீட்டர் தொலையிலுள்ள ஓர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். அவ்வூரின் பெயர் எம்மாவு. அவர்கள் இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக் கொண்டே சென்றார்கள். இப்படி அவர்கள் உரையாடிக் கொண்டும் வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார். ஆனால் அவர் யார் என்று அறிந்து உணர முடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. அவர் அவர்களை நோக்கி, "வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?" என்று கேட்டார். அவர்கள் முகவாட்டத்தோடு நின்றார்கள். அவர்களுள் கிளயோப்பா என்னும் பெயருடைய ஒருவர் அவரிடம் மறுமொழியாக, "எருசலேமில் தங்கியிருப்பவர்களுள் உமக்குமட்டும்தான் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதோ!" என்றார். அதற்கு அவர் அவர்களிடம், "என்ன நிகழ்ந்தது?" என்று கேட்டார். அவர்கள் அவரிடம், "நாசரேத்து இயேசுவைப் பற்றியேதான் பேசுகின்றோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரணதண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாள்கள் ஆகின்றன. ஆனால் இன்று எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர் எங்களை மலைப்புக்குள்ளாக்கினர்; அவர்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றார்கள்; அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து, வானதூதர்களைக் கண்டதாகவும் இயேசு உயிரோடியிருக்கிறார் என்று அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள். எங்களோடு இருந்தவர்களுள் சிலரும் கல்லறைக்குச் சென்று, அப்பெண்கள் சொன்னவாறே இருக்கக் கண்டனர். ஆனால் அவர்கள் இயேசுவைக் காணவில்லை" என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி, "அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சி அடைவதற்குமுன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா!" என்றார். மேலும் மோசேமுதல் இறைவாக்கினர்வரை*

*அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார். அவர்கள் தாங்கள் போக வேண்டிய ஊரை நெருங்கி வந்தார்கள். அவரோ அதற்கு அப்பால் போகிறவர் போலக் காட்டிக் கொண்டார். அவர்கள் அவரிடம், "எங்களோடு தங்கும்; ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று; பொழுதும் போயிற்று" என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்கவைத்தார்கள். அவர் அங்குத் தங்குமாறு அவர்களோடு சென்றார். அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார். அப்போது, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக் கொண்டார்கள்.*

***சிந்தனை:***

- *வாசகத்தை உரத்த குரலில் வாசித்து. திறந்த மனதுடன் செவிமடுக்கவும்.*
- *ஒரு வார்த்தை அல்லது சொற்றொடர் உங்கள் மனதை தொடும்வரை மௌனமாக தனித்து படியுங்கள்*
- *வார்த்தை அல்லத சொற்றொடர் வாயிலாக பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு என்ன கூறுகிறார்?*
- *ஆண்டவரின் வார்த்தைக்கு பதில் மொழியாக அவருக்கு நீங்கள் என்ன கூறினீர்கள்?*
- *இறைவார்த்தை வாயிலாக உங்கள் உள்ளம் உங்களுக்குள் எப்படி பற்றி எரிந்தது என்ற உங்கள் அனுபவங்களை (3-4 நபர்கள்) கொண்ட குழுக்களில் பகிர்ந்து கொள்ளவும். மேலும் உங்களுக்கு பிடித்த இறைத்திரு வசனம் மற்றும் ஏன் அது உங்களுக்கு மிகுந்த அர்த்தம் உள்ளதாக இருந்தது என்பதை பகிரவும்.*

## செயல்

*2020ம் ஆண்டு கருபொருள் **"குணமளிக்க மகிழ்ச்சியுடன் அனுப்பப்படுதல்".** எனவே நமக்குள்ளே, நமது குடும்பத்தில், அ.தி.ச. மற்றும் துன்புறும் சமூகத்திற்கு மகிழ்ச்சியையும் குணமளிப்பையும் கொண்டு செல்ல இவ்வாண்டு இறைவனின் வார்த்தையை எவ்வாறு பகிரமுடியும் என்பதை சலந்து பேசவும்.*

*அ.தி.ச. குழுவின் மற்றொரு உறுப்பினர் **முடிவு செபத்தை** கூறவும்.*

**முடிவு பாடல்:**

*இயேசு கிறிஸ்து ஆண்டவர் இன்றும் என்றும் இருப்பவர்*
*இன்னல் நீக்கி என்னை என்றும் காப்பவர்* (2)
*ஆனந்தம் அல்லேலூயா* 2
*இறைவன் இயேசு என்றும் என்னில் இருப்பதால்* (2)

1. *பாவக்கறைகள் நிறைந்த எந்தன் உள்ளத்தை* - 2
*பரமன் இயேசு குருதி சிந்திக் கழுவினார்* - 2
*அமைதி இன்றி அலைந்த எந்தன் மனத்தினை* - 2
*ஆவி அனுப்பி அன்பு பொழிந்து மாற்றினார்* - 2

2. *இரவும் பகலும் மகிழ்ச்சியோடு இருக்கின்றேன்* - 2
*இயேசு அருளால் இனி எனக்குக் குறையில்லை* - 2
*இன்பம் துன்பம் எது வந்தாலும் பயமில்லை* - 2
*இயேசு எனது இறைவனாக இருப்பதால்* - 2